நிறுவனங்களிடமிருந்து பண உதவி பெற்று புதிதாகக் கட்ட உத்தேசித்திருக்கும் கட்டிடங்களில் மாற்றுவது பற்றிய திட்டத்தினை அரசு ஆராய்ந்து வருகிறது.

பொதுமக்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்.

43. கடந்த சில ஆண்டுகளாக, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னையிலும், பிற நகரங்களிலும் அதற்குச் சொந்தமாக உள்ளதும், மற்றும் அதனுல் நிருவகிக்கப்படுவது மான பொதுமக்களுக்கான வாடகை வீடுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவில்லை. பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினரும், குறைந்த வருமானப் பிரிவினரும், வசதிகளற்ற வீடுகளுக்கு அதிகபட்ச வாடகையினைத் தரும் நிலையில் உள்ளனர். இந்த நிலையை மாற்றி அமைக்க, வீட்டு வசதி வாரியத்தினுல் பொது மக்களுக்கான வாடகை வீடுகளைத் தொடர்ந்து சென்னையிலும், வெளியூர்களிலும் கட்டுவது பற்றிய திட்டங்களை அரசு ஆராய்ந்து வருகிறது.

இணைப்பு IV.

[51-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை

கோரிக்கை எண் 49.

பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்கலுக்கான முதலீடு 1978–79 ரூ. 21·19 இலட்சங்கள்

அதிக அளவில் தண்ணீர் தேவைப்படும் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அவைகளாகவே அதற்கு ஒரு ஏற்பாடு செய்து கொள்ளமுடியாத நிலையில் அரசாங்கமே தண்ணீர் வழங்கும் திட்டங்களை நிறைவேற்றிப் பராமரித்துத் தண்ணீர் வழங்குகின்றது. இப்பணிகளை ஏப்ரல் 1971-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட குடிநீர் வடிகால் வாரியம் கவனித்துக் கொள்கின்றது. இந்த முதலீட்டை முறையான விகிதத்தில் ஈடு செய்யும் வகையில் பயனுறும் நிறுவனங்களிடமிருந்து தண்ணீர் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. தற்போதைக்கு பின்வரும் திட்டங்கள் இந்த வகையில் அடங்கும் :—

வரிசை எண்.	திட்டங்களின் பெயர்.
1.	பாதுகாப்புத் தொழிற்சாலை, ஆவடி, நீர் வழங்கும் திட்டம்.

வரிசை எண்.	திட்டங்களின் பெயர்.
2.	தூத்துக்குடி மூன்று மில்லியன் காலன்கள் நீர் வழங்கும் திட்டம்.
3.	திருச்சிராப்பள்ளி சிறிய போர்க்கருவி திட்டத்திற்கான நீர் வழங்கும் திட்டம்.
4.	தூத்துக்குடி 20 மில்லியன் காலன்கள் நீர் வழங்கும் திட்டம்.
5.	திருச்சிராப்பள்ளி வட்டார பொறியியற் கல்லூரிக்கான நீர் வழங்கும் திட்டம்.

தூத்துக்குடி 20 மில்லியன் காலன்கள் திட்டத்தின் பெரும் பகுதி முடிந்துவிட்டது. இவ்வாண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் தூத்துக்குடி ஆல்காலி கெமிகல்ஸ், மற்றும் பிளாஸ்டிக் ரேசின் கெமிகல் இல்லுமினேட் தொழிற்சாலை ஆகியவற்றிற்கு நீர் வழங்க துணைக் குழாய்கள் அமைக்கும் பணிக்காக 1978-79-ம் ஆண்டில் ரூ. 21.18 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன் ஆவடியிலுள்ள பாதுகாப்புத் தொழிற்சாலைக்கு நீர் வழங்கும் திட்டத்திற்கு நிர்வாகச் செலவிற்கு ரூபாய் 1,000 அடையாள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS